**3901**

Register Number | | | | | |

# தமிழ் - முதல் தாள்

## [ செய்யுள், உரைநடை ]

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III-க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 7 × 2 = 14

1. ஏன் அறநெறி ஓங்குதல் வேண்டும் ?
2. வலிமையில்லாதவரும் வெல்வர் - எப்பொழுது ?
3. எதனைச் சிந்தித்தல் வேண்டும் ?
4. கம்பராமாயணத்திலுள்ள காண்டங்களை எழுதுக.
5. பூவைநிலைத் துறை விளக்கம் தருக.
6. சொல்லுதற்கு அரிய மலை எது ? அது யாருக்குரியது ?
7. குறுமுனிக்கு அச்சம் பிறக்கக் காரணம் யாது ?
8. சுற்றுப்புறத்தைக் காக்க எதனைத் தவிர்த்திடுவோம் எனக் கவிஞர் பூங்கோவன் குறிப்பிடுகின்றார் ?
9. புத்தர் எதை மொழிந்தார் ? எதற்கு உழந்தார் ?

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 5 × 4 = 20

10. திரு.வி.க. வேண்டுவன யாவை ?
11. நரகு செல்வார் யாவர் ?

[ Turn over

12. நாமநீர் வேலி உலகிற் கவனளிபோல்

மேல்நின்று தான்சுரத்த லான் - உவமையை விளக்கிப் பொருளொடு பொருத்துக.

13. 'சீதையின் மனத்தவமே சிறந்தது' என அனுமன் வியந்து கூறியமைக்கான காரணத்தை எழுதுக.

14. பாண்டியன் நன்மாறனின் சிறப்புகளாகச் சீத்தலைச் சாத்தனார் கூறுவன யாவை ?

15. குமரகுருபரர் மீனாட்சியை எவ்வாறெல்லாம் விளிக்கிறார் ?

16. திருவேங்கடத்து இறைவனை நம்மாழ்வார் எங்ஙனம் போற்றியுள்ளார் ?

III. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக : $4 + 2 + 2 = 8$

17. 'பிறர்...' எனத் தொடங்கும் திரிகடுகப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

18. 'ஒன்றா .....' எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

19. 'உயர்வு' என முடியும் குறட்பாவை எழுதுக.

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக. $1 \times 8 = 8$

20. 'வெகுளாமை' பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுக்க.

21. 'சிலுவைப்பாடு' என்னும் பகுதியிலுள்ள கருத்துகளைத் தொகுக்க.

22. பாரதியார் கூறும் பாரதப் பூமியின் பெருமைகளைத் தொகுக்க.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக : $4 \times 1 = 4$

23. பொருத்துக :

| | | |
|---|---|---|
| அ) குருசு | — | தொண்டர் |
| ஆ) தொடை | — | சோலை |
| இ) நல்குரவு | — | மாலை |
| ஈ) பொதும்பர் | — | வறுமை |
| | — | சிலுவை. |

சரியான விடையைத் தேர்க : $6 \times 1 = 6$

24. திரிகடுகத்தை இயற்றியவர் .................

அ) காரியாசான் ஆ) நல்லாதனார் இ) நாகனார்

25. 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாடியவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி

26. கம்பர் இயற்றிய நூல்களுள் ஒன்று

அ) நரிவிருத்தம் ஆ) சரசுவதி அந்தாதி இ) மூவருலா

27. திரிகூடமலை வளத்தைக் கூறியவள்

அ) தோழி ஆ) மாமி இ) குறத்தி.

28. மையிருட்டுக் கைந்நீட்டும்

அ) மேற்குவானில் ஆ) தொடுவானில் இ) கீழ்த்திசையில்.

29. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

அ) ஜி.யு. போப் ஆ) வீரமாமுனிவர் இ) ஹீராஸ் பாதிரியார்.

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $5 \times 2 = 10$

30. உள்வளத் திறமை என்பது என்ன ?

31. சீறாப்புராணம் எங்கு எவர் உதவியால் அரங்கேற்றப்பட்டது ?

32. 'இராமன் விளைவு' - விளக்குக.

33. காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தை ஈ.வெ.ரா. எவ்வாறு ஏற்று நடத்தினார் ?

34. அரங்கேற்றம் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

35. திரு.வி.க. 'கொழு கொம்பு' என்று எதனைக் குறிப்பிடுகிறார் ?

36. சிதம்பரனாரின் வாக்கு வன்மைக்குச் சான்று தருக.

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $4 \times 4 = 16$

37. கவிராயருக்குச் சேதுபதி வேந்தர் கலையூரைப் பரிசளிக்கக் காரணம் யாது ?

38. இந்தியர்கள் தம் இலக்குகளை அடைவதோடு உன்னத உயர்வு அடைய கலாம் அவர்கள் கூறுவனவற்றை எழுதுக.

39. தங்கையின் வாழ்வில் எவற்றைக் கண்டு மு.வ. பெருமிதம் கொள்கிறார் ?

40. பெரியாரோடு பிறந்த இரண்டு நல்லுணர்வுகளை விளக்குக.

41. அம்பலத்தடியார் அறிவிற் குறைபாடுடையவர் என்பதற்கு இரு சான்றுகள் தருக.

42. உமறுப்புலவரின் நன்றி மறவாப் பண்பினை விளக்குக.

[ Turn over

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் ( பதினைந்து வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $1 \times 8 = 8$

43. சிதம்பரனாரின் நாட்டு விடுதலைத் தொண்டுபற்றி விளக்கு.

44. ஒலி, ஒளி பற்றிய உண்மையைச் சாத்தனார் எவ்வாறு விளக்குகிறார் ?

45. 'தாய்மொழியிலேயே கல்வி பெறலாம்' என்பதைத் திரு.வி.க. எவ்வாறு நிறுவுகிறார் ?

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : $4 \times 1 = 4$

46. உமறுப் புலவரைப் போற்றிப் பாதுகாக்க முன்வந்த புரவலர்

அ) வாலைவாரிதி

ஆ) அபுல்காசிம் மரைக்காயர்

இ) உசேன் நயினார்.

47. 'நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு' என்னும் அறிவியல் உண்மையைக் கண்டுபிடித்தவர் .............

அ) நியூட்டன்

ஆ) கலிலியோ

இ) பாஸ்கல்.

48. நட்புக்குக் கரும்பை உவமையாகச் சொன்ன இலக்கியம்.............

அ) திரிகடுகம்

ஆ) நாலடியார்

இ) திருக்குறள்.

49. காந்தியார் காட்டிய ........... போராட்டத்தைப் பெரியார் விழிப்பாகக் கடைப்பிடித்தார்

அ) ஒத்துழையாமை

ஆ) உப்புக்காய்ச்சுதல்

இ) அந்நியப் பொருள் புறக்கணிப்பு.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் **இரண்டினை** மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுது. $2 \times 1 = 2$

50. அ) அரைகுறை

ஆ) வரிசையறிந்து

இ) நாளடைவில்.